
தமிழ் மக்கள் குரல்
போலீஸ் டைரி
வார இதழ்

2 நவம்பர் 2026, திங்கள்





மதுரவாயல் பகுதியில் ஆரம்ப சுகாதார கட்டிட பணிகள் நடைபெறும்...
பக்கம் 3



வானகரம் பகுதியில் தனியார் ஓட்டலின் சமையலறைக்குள் அத்துமீ...
பக்கம் 4



யானைகவுனி பகுதியில் கால் டாக்சி காரில் பயணம் செய்த வயதான...
பக்கம் 5



எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் கட்டுமானம் நடைபெறும் இடத்தில் அத்துமீறி நுழைந்...
பக்கம் 7


கோயம்பேடு பகுதியில் நடந்து சென்ற நபரின் ஐபோனை பறித்துச் சென்ற வழக்கில் இருவர் கைது
பக்கம் 8



இருவேறு வழக்குகளில் குட்கா புகையிலை பாக்கெட்டுகளை விற்பனை...
பக்கம் 10



திருவல்லிக்கேணி பகுதியில் மகன் மற்றும் தாயை தாக்கிய வழக்கில் 5 நபர்கள்...
பக்கம் 11



தண்டையார்பேட்டையில் தீபாவளி பண்டு சீட்டு நடத்தி ரூ.23.16 இலட்சம் மோசடி...
பக்கம் 13

PASSPORT | MSME | PAN | AADHAAR

FSSAI | PATTA | LEGALHEIR

2,4 WHEELER INSURANCE

PROPERTY TAX, EB - NAME TRANSFER

STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE

ALL ONLINE SERVICES

இ-சேவை மையம்

ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்


பொது இ-சேவை மையம்

8148231942 / 8144337349

11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

போலீஸ் செய்தி

மதுரவாயல் பகுதியில் ஆரம்ப சுகாதார கட்டிட பணிகள் நடைபெறும் இடத்தில் மின் ஒயர்களை துண்டித்து திருட முயன்ற 2 நபர்கள் கைது



ஆல்பர்ட் பெர்ணான்டஸ், வ/29 என்பவர், சென்னையிலுள்ள தனியார் நிறுவனத்தில் மேலாளராக வேலை செய்து கொண்டு, அந்நிறுவனம் மூலம், மதுரவாயல், ஏரிக்கரை அருகே உள்ள ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் கட்டிட வேலை நடைபெற்று வரும் பணிகளை மேற்பார்வை செய்து வருவதாகவும், கடந்த 30.10.2026 அன்று காலை, மேற்படி கட்டிட வேலை நடைபெறும் இடத்தில் 2 நபர்கள் புகுந்து மின் ஒயர்களை துண்டித்து திருட முயன்றபோது மற்ற ஊழியர்கள் சேர்ந்து இருவரையும் மடக்கிப் பிடித்து, மேற்படி இடத்தில் ஒயர்களை திருட முயன்ற இருவரையும் T-4 மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவில் ஒப்படைத்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆல்பர்ட் பெர்ணான்டஸ் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.


T-4 மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில் பிடிபட்ட நபர்கள் ராஜா, வ/54 மற்றும் அங்கிட்குமார், வ/24 என்பதும், இருவரும் மேற்படி இடத்தில் மின் ஒயர்களை திருட முயன்று பிடிபட்டதும் தெரியவந்ததின்பேரில், மேற்படி ஒயர்களை திருட முயன்றது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து,

எதிரிகள் 1.ராஜா, வ/54, தெற்கு மாட வீதி, மதுரவாயல், சென்னை, 2.அங்கிட்குமார், வ/32, சமஸ்திபூர் மாவட்டம், பீகார் மாநிலம் ஆகிய இருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று (30.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

போலீஸ் செய்தி

வானகரம் பகுதியில் தனியார் ஓட்டலின் சமையலறைக்குள் அத்துமீறி நுழைந்து தகராறு செய்து கண்ணாடிகளை உடைத்த 2 நபர்கள் கைது



பாலமுருகன், வ/30 என்பவர் சென்னை, வானகரம், மேட்டுக்குப்பம் பகுதியிலுள்ள தனியார் ஓட்டலின் சமையலறைக் கூடத்தில் ஸ்டோர் மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி சமையலறைக் கூடத்தில் வெளியாட்களுக்கு அனுமதியில்லாமல், வேலையாட்களை கொண்டு சமையல் செய்து ஓட்டல்களுக்கு அனுப்பி வைப்பதாகவும், கடந்த 28.10.2026 அன்று இரவு அடையாளம் தெரியாத 2 நபர்கள் மேற்படி சமையலறை கட்டிடத்தில் அத்துமீறி நுழைந்து, 2வது தளத்தில் நடந்து சென்றபோது, அங்கிருந்த ஊழியர்கள் ''ஏன் இங்கு வந்தீர்கள்? இங்கு வரக்கூடாது'' என கூறியபோது, இருவரும் தகாத வார்த்தைகளால் பேசி அந்த ஊழியரை கீழே தள்ளி, அங்கிருந்த கண்ணாடிகளை உடைத்துவிட்டு, கொலை மிரட்டல் விடுத்து

சென்றதாகவும், மேற்படி 2 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி மேலாளர் பாலமுருகன் என்பவர் T-5 வானகரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது வழக்குப் பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

T-5 வானகரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.டில்லிபாபு, வ/22, தனலட்சுமி நகர், ஆலப்பாக்கம், மதுரவாயல், சென்னை 2.ஜெயசூரியா, வ/24, பாரதியார் நகர், வானகரம், சென்னை ஆகிய 2 நபர்களை நேற்று (30.10.2026) கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி டில்லிபாபு மீது ஏற்கனவே 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 2 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நேற்று (30.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

போலீஸ் செய்தி

யானைகவுனி பகுதியில் கால் டாக்சி காரில் பயணம் செய்த வயதான பெண்மணியை தகாத வார்த்தைகள் பேசி, மிரட்டிய கார் ஓட்டுநர் கைது



சென்னை, சௌகார்பேட்டை, திருப்பள்ளி தெருவில் குடும்பத்தினருடன் வசித்து வரும் ஷ்ரீயாஸ், வ/21 என்பவர் தனியார் கல்லூரியில் படித்து வருவதாகவும், கடந்த

28.10.2026 அன்று மாலை, இவரது மாமா, அத்தை மற்றும் பாட்டி ஆகிய மூவரும் குரோம்பேட்டையிலிருந்து சௌகார்பேட்டைக்கு வருவதற்கு தனியார் கால் டாக்சி செயலி மூலம் வாடகை கார் பதிவு செய்து, டாக்சி காரில் பயணம் செய்து, அவரது மாமா மற்றும் அத்தை ஆகியோர் யானைகவுனி பகுதியில் இறங்கிவிட்டதாகவும், பின்னர் அவரது பாட்டியை திருப்பள்ளி தெருவில் உள்ள வீட்டில் இறக்கிவிடுமாறு பாட்டி கூறியபோது, கார் ஓட்டுநர் தங்களது வீட்டிலிருந்து சுமார் 200 மீட்டர் தள்ளி இறக்கிவிட்டு, மேற்படி சவாரி செய்த பணம் ரூ.488/- என்று செல்போனில் காட்டியபோது, கார் ஓட்டுநர் அதிக பணம் கேட்டதாகவும், பின்னர் பாட்டி பணம் ரூ.500/- கொடுத்தபோது, கார் ஓட்டுநர் பாட்டியின் லக்கேஜ்களை சாலையில் தூக்கி போட்டுவிட்டு, தகாத வார்த்தைகள் பேசி, கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், மேற்படி தனது பாட்டியை சவாரிக்கு அதிக பணம் கேட்டு, தகாத வார்த்தைகள் பேசி, பொருட்களை விசிச் சென்ற கார் ஓட்டுநர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஷ்ரீயாஸ் என்பவர், C-2 யானைகவுனி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (BNS) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் (TNPHW) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

C-2 யானைகவுனி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட கால் டாக்சி கார் ஓட்டுநர் முகமது

ஷாஜகான், வ/37, பாபநாசம், தஞ்சாவூர் மாவட்டம் என்பவரை நேற்று (30.10.2026) கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி முகமது ஷாஜகான் விசாரணைக்குப் பிறகு நேற்று (30.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

போலீஸ் செய்தி

எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் கட்டுமானம் நடைபெறும் இடத்தில் அத்துமீறி நுழைந்து பெண்ணிடம் தகாத முறையில் நடக்க முயன்ற சரித்திர பதிவேடு குற்றவாளி கைது



மேற்கு வங்களாத்தைச் சேர்ந்த மகிபூர், வ/37 என்பவர், அவரது மனைவியுடன் சென்னை, எம்.ஜி.ஆர். நகர், பாரதியார் தெருவில் கட்டுமானம் நடைபெறும் வீட்டில் வேலை செய்து கொண்டு, அங்கேயே தங்கி வருவதாகவும், நேற்று (30.10.2026) அதிகாலை இருவரும் மேற்படி இடத்தில் தூங்கிக் கொண்டிருந்தபோது, ஒரு நபர் மகிபூரின் மனைவியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு தகாத முறையில் நடக்க முயன்றபோது, அப்பெண் எழுந்து கூச்சலிடவே, அந்த நபர் தப்பியோடிவிட்டதாகவும், மேற்படி தகாத முறையில் நடக்க முயன்ற நபரை பிடித்து நடவடிக்கை எடுக்கும்படியும், மகிபூர் என்பவர் R-10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (BNS Act) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்

சட்டம் (TNPHW Act) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

R-10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி சுரேஷ், வ/41, அன்னை சத்யா நகர், மேற்கு ஜாபர்கான்பேட்டை, சென்னை என்பவரை நேற்று (30.10.2026) கைது செய்தனர்.

R-10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளியான எதிரி சுரேஷ் மீது ஏற்கனவே 9 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி சுரேஷ் விசாரணைக்குப் பின்னர் நேற்று (30.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

போலீஸ் செய்தி

கோயம்பேடு பகுதியில் நடந்து சென்ற நபரின் ஐபோனை பறித்துச் சென்ற வழக்கில் இருவர் கைது

சென்னை, கூடுவாஞ்சேரி, அன்னை அஞ்சுகம் நகரில் வசித்து வரும் மோகனசுந்தரம், வ/50 என்பவர் டிரைவராக வேலை செய்து வருவதாகவும், மோகனசுந்தரம் கடந்த 28.10.2026 அன்று அதிகாலை, கோயம்பேடு 100 அடி சாலையில் உள்ள ஒரு உணவகம் அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த 3 நபர்கள் மோகனசுந்தரத்தை

வழிமறித்து, அவர் கையில் வைத்திருந்த ஐபோனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றதாகவும், மேற்படி 3 நபர்களை பிடித்து தனது ஐபோனை மீட்டு தரும்படியும் மோகனசுந்தரம் என்பவர் K-11 CMBT காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில், வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

K-11 CMBT காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி ஐபோன் பறிப்பில் ஈடுபட்ட நித்திஷ், வ/19, பி.வி.காலனி, வியாசர்பாடி, சென்னை என்பவரை 28.10.2026 அன்று கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார். கைது செய்யப்பட்ட எதிரி நித்திஷ் மீது ஏற்கனவே ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.

மேலும், K-11 CMBT காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் குழுவினர், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை தேடி வந்த நிலையில், மற்றொரு தலைமறைவு எதிரி தேவகுமார், வ/26, கோயம்பேடு, சென்னை என்பவரை நேற்று (30.10.2026) கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி தேவகுமார் விசாரணைக்குப் பின்னர் நேற்று (30.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், இவ்வழக்கில் ஐபோனுடன் தலைமறைவாக உள்ள முக்கிய எதிரியை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

போலீஸ் செய்தி

இருவேறு வழக்குகளில் குட்கா புகையிலை பாக்கெட்டுகளை விற்பனை செய்த பெண் உட்பட 3 நபர்கள் கைது

மொத்தம் 50.6 கிலோ குட்கா பாக்கெட்டுகள் மற்றும் பணம் ரூ.35,000/- பறிமுதல்

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்களின் உத்தரவின்பேரில், சென்னை பெருநகரில் போதைப் பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களுக்கு எதிரான சிறப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு தீவிரமாக கண்காணித்து சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



இதன் தொடர்ச்சியாக E-2 இராயப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், நேற்று (30.10.2026) காலை, இராயப்பேட்டை, பீட்டர்ஸ் சாலையில் உள்ள ஒரு பீடா கடையை கண்காணித்து, அங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகளை பதுக்கி வைத்து சட்டவிரோதமாக விற்பனை செய்து கொண்டிருந்த 1.முகமது மார்கூப், வ/23, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை மற்றும் இவரது தம்பி 2.முகமது மசூம், வ/18 ஆகிய இருவரை கைது செய்தனர். இவர்களது கடையிலிருந்து 27 கிலோ எடை கொண்ட Signature மற்றும் ஜர்தா குட்கா பாக்கெட்டுகள் மற்றும் பணம் ரூ.35,000/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் ஏற்கனவே குட்கா விற்பனை செய்தது தொடர்பாக முகமது மார்கூப் மீது 3 வழக்குகளும், முகமது மசூம் மீது 1 வழக்கும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதே போல, J-9 துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், நேற்று (30.10.2026) காலை, பெருங்குடி, திருவள்ளுவர் நகர் 1வது குறுக்கு தெருவில் உள்ள ஒரு பங்க் கடையில் குட்கா பாக்கெட்டுகளை விற்பனை செய்து கொண்டிருந்த அமுதவள்ளி, பெ/வ.43, பெருங்குடி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரது கடையிலிருந்து 23.6 கிலோ எடை கொண்ட ஹான்ஸ், ஸ்வாகத், விமல், வி1 உள்ளிட்ட குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி அமுதவள்ளி விசாரணைக்குப் பின்னர், நேற்று (30.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

போலீஸ் செய்தி

திருவல்லிக்கேணி பகுதியில் மகன் மற்றும் தாயை தாக்கிய வழக்கில் 5 நபர்கள் கைது

சென்னை, திருவல்லிக்கேணி, எஸ்.எம். நகர், பல்லவன் சாலையில் வசித்து வரும் த.ஹரிபிரசாத், வ/24 என்பவர்



பிளம்பர் வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 26.10.2026 அன்று சிந்தாதிரிப்பேட்டை பகுதியிலுள்ள ஒரு திருமண மண்டபத்தில் நிகழ்ச்சிக்கு சென்றிருந்தபோது, அங்கு வந்த அப்பகுதியைச் சேர்ந்த பா.ஹரிபிரசாத் (எ) ஹரி, வ/22 என்பவருக்கும் இவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு இருவரும் சென்றதாகவும், இந்நிலையில், த.ஹரிபிரசாத் கடந்த 28.10.2026 அன்று மாலை வீட்டினருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த மேற்படி பா.ஹரிபிரசாத் மற்றும் அவரது 4 நண்பர்கள் என 5 நபர்களும் சேர்ந்து த.ஹரிபிரசாத்தை தகாத வார்த்தைகளால் பேசி கையாலும், கட்டை மற்றும் பீர் பாட்டிலால் தாக்கி, கத்தியை திருப்பி பிடித்து தாக்கியும், சத்தம் கேட்டு தடுக்க வந்த த.ஹரிபிரசாத்தின் தாயாரையும் கட்டையால் தாக்கி கீழே தள்ளிவிட்டு, கொலை மிரட்டல் விடுத்து 5 நபர்களும் தப்பிச் சென்றதாகவும், இரத்தக் காயமடைந்த த.ஹரிபிரசாத் மற்றும் அவரது தாயார் ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து த.ஹரிபிரசாத் கொடுத்த புகார் மீது D-1 திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

D-1 திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள்

1.பா.ஹரிபிரசாத், வ/22, எஸ்.எம். நகர், பல்லவன் சாலை, 2.முகேஷ், வ/20, காந்தி நகர், பல்லவன் சாலை, 3.சந்தோஷ் (எ) உச்சிபுளி, வ/21, காந்தி நகர், பல்லவன் சாலை, 4.ராகுல் கிருஷ்ணன், வ/21, காந்தி நகர், பல்லவன் சாலை, 5.பிரின்ஸ், வ/31, எஸ்.எம். நகர், பல்லவன் சாலை ஆகிய 5 நபர்களை நேற்று (30.10.2026) கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரிகள் சந்தோஷ், ராகுல்கிருஷ்ணன் மற்றும் பிரின்ஸ் ஆகியோர் மீது ஏற்கனவே தலா 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 5 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நேற்று (30.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

போலீஸ் செய்தி

தண்டையார்பேட்டையில் தீபாவளி பண்டு சீட்டு நடத்தி ரூ.23.16 இலட்சம் மோசடி செய்து தலைமறைவான கணவன்-மனைவி கைது



சென்னை, தண்டையார்பேட்டை, ரெட்டைக்குழி தெருவில் வசித்து வரும் பத்மாவதி, பெ/வ.64 என்பவர் மளிளைக் கடை நடத்தி வருவதாகவும், இவரது வீட்டில் சமையல் வேலை செய்து வந்த அருள்லட்சுமி (எ) லட்சுமி என்பவர் 2020ம் ஆண்டு அவரது கணவர் பழனி என்பவருடன் சேர்ந்து தீபாவளி பண்டு சீட்டு பிடிப்பதாகவும், நீங்களும் சேர வேண்டும், உங்களுக்கு

தெரிந்த நபர்களையும் சேர்த்துவிடுங்கள் என பத்மாவதியிடம் கூறியதன்பேரில், பத்மாவதி தீபாவளி சீட்டில் சேர்ந்து அவருக்கு தெரிந்த சுமார் 60 நபர்களை சேர்த்துவிட்டதாகவும், 2021ம் ஆண்டு மற்றும் 2022ம் ஆண்டு சீட்டு முதிர்ச்சி அடைந்தவுடன் வாடிக்கையாளர்களுக்கு சரியாக முதிர்ச்சி பணம் கொடுத்ததின்பேரில், மீண்டும் பத்மாவதி 108 நபர்களை அருள்லட்சுமியின் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டு சீட்டில் சேர்த்துவிட்ட நிலையில் 2023ம் ஆண்டு முதிர்ச்சி அடைந்தவுடன் 108 வாடிக்கையாளர்களின் தீபாவளி பண்டு சீட்டு பணம் மற்றும் பொங்கல் பண்டு சீட்டு பணத்தை வாடிக்கையாளர்களுக்கு கொடுக்காமல் தலைமறைவானதாகவும், மேற்படி கணவன்-மனைவியை கண்டுபிடித்து வாடிக்கையாளர்கள் செலுத்திய மொத்தம் ரூ.23.16 இலட்சம் பணத்தை மீட்டு தருமாறும் பத்மவாதி என்பவர் H-3 தண்டையார்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், மோசடி பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

H-3 தண்டையார்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, கோயம்புத்தூர் பகுதியில் வசித்து வந்த தலைமறைவு எதிரிகளான அருள்லட்சுமி (எ) லட்சுமி, பெ/வ.38, சின்னயம்பாளையம், சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் இவரது கணவர் பழனி, வ/50 ஆகியோரை நேற்று (29.10.2026)கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று (29.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

போலீஸ் செய்தி

இராயபுரம் பகுதியில் வாடகைக்கு கொடுத்த காரை அபகரித்துக் கொண்டு தலைமறைவான நபர் கைது

கார் மீட்பு



சென்னை, இராயபுரம், வெங்கடாசலம் தெருவில் வசித்து வரும் ஹலன் ரேபேக்கா, பெ.வ/75 என்பவர் அவரது மகனுக்கு சொந்தமான Honda Aura என்ற காரை ஓட்டுவதற்கு டிரைவர் தேவை என சமூக வலைதளத்தில் விளம்பரம் செய்திருந்த நிலையில், அதனை பார்த்து பிரம்மன் என்பவர் ஹலன் ரேபேக்காவை நேரில் அணுகியபோது, தினசரி வாடகையாக ரூ.1,200/- கொடுப்பதாக சொல்லி 08.09.2026 அன்று ஹலன் ரேபேக்கா காரை பிரம்மனிடம் கொடுத்ததாகவும், பிரம்மன் முதலில் 20 நாட்களுக்கு தினசரி வாடகை பணத்தை கொடுத்து வந்த நிலையில், பின்னர் காருக்கான தினசரி வாடகை பணத்தை கொடுக்காததால், ஹலன் ரேபேக்கா, மேற்படி பிரம்மனை செல்போனில் தொடர்பு கொண்டபோது, பிரம்மன் செல்போனை சுவிட்ச் ஆப் செய்து விட்டு, காரில் இருந்த GPS கருவியையும் கழற்றிவிட்டு,

காரை அபகரித்துக் கொண்டு தலைமறைவானதாகவும், மேற்படி நபரை கண்டுபிடித்து தனது காரை மீட்டு தரும்படியும் ஹலன் ரேபேக்கா என்பவர் N-1 இராயபுரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்தின் பேரில் மோசடி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு போலீசார் செய்து விசாரணை மேற்கொண்டனர்.

N-1 இராயபுரம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில் எதிரி பிரம்மன், புகார்தாரரிடமிருந்து காரை வாடகைக்கு என பெற்றுச் சென்று, காரின் நம்பர் பிளேட்டை மாற்றி, வாடகை காராக ஓட்டி வந்தது தெரியவந்ததின்பேரில், எதிரி பிரம்மன், வ/29, பொத்தூர், திருமுல்லைவாயல், சென்னை என்பவரை நேற்று (29.10.2026) அன்று கைது செய்தனர். இவரிடமிருந்து புகார்தாரரின் கார் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி பிரம்மன் விசாரணைக்குப் பின்னர் இன்று (30.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.

போலீஸ் செய்தி

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள், பணி ஓய்வு பெறுகின்ற 11 காவல் அதிகாரிகள், அமைச்சுப்பணியாளர் மற்றும் காவல் ஆளிநர்களின் பணியை பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார்



சென்னை பெருநகர காவல்துறையில் பணிபுரிந்து வரும் நிர்வாக அதிகாரி திரு.கலைச்செல்வம், காவல் ஆய்வாளர் (ஆயுதப்படை) திரு.வெங்கட்ராஜ், காவல்

உதவி ஆய்வாளர்கள் திரு.தினகரன், திரு.நந்தகுமார், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ரவிச்சந்திரன், துரைமுருகன், சீனிவாசன், பத்மராஜ், செல்வம், காந்தி மற்றும் ஆயுதப்படை தூய்மை பணியாளர் திருமதி.சுசீலா என மொத்தம் 11 காவல் அதிகாரிகள், அமைச்சுப்பணியாளர் மற்றும் காவல் ஆளிநர்கள் நாளை (31.10.2026) பணி ஓய்வு பெறுகின்றனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள் இன்று (30.10.2026) வேப்பேரி, காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பணி நிறைவு விழாவில், சென்னை பெருநகர காவலில் பணிபுரிந்து ஓய்வு பெறுகின்ற 11 காவல் துறையினர், 29 ஆண்டுகள் முதல் 40 ஆண்டுகள் வரை சிறப்பாக பணிபுரிந்ததை பாராட்டி, தமிழக காவல்துறைக்கும், சென்னை பெருநகர காவல்துறைக்கும் பெருமை சேர்த்ததை நினைவு கூர்ந்து பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார்.

மேலும், காவல்துறைக்கு ஒத்துழைப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்தும், பணி ஓய்வு பெறுகின்ற காவல் அதிகாரிகள், அலுவலர்கள் தங்களது உடல் நலத்தையும், குடும்பத்தையும் பேணி காக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் காவல் துணை ஆணையாளர் (நிர்வாகம்) திருமதி.G.சுப்புலட்சுமி, இ.கா.ப., திரு.P.சுந்தரவடிவேல் (நலன் மற்றும் எஸ்டேட்), காவல் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெறுகின்ற காவல் அலுவலர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

போலீஸ் செய்தி

மருத்துவமனையிலிருந்து காணாமல் போன போக்சோ வழக்கு குற்றவாளியை போலீசார் தேடி வருகின்றனர்

நேற்று (30.10.2026), 61 வயது ஆட்டோ ஓட்டுநர், அவரது ஆட்டோவில் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த 8 வயது சிறுமியிடம் தவறாக நடந்து கொண்டதற்காக பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் மற்றும் உறவினர்களால் தாக்கப்பட்டு, தலை மற்றும் முதுகில் காயங்கள் ஏற்பட்டன. பின்னர், நேற்று இரவு ஆட்டோ ஓட்டுநரின் மகன், காயமடைந்த ஆட்டோ ஓட்டுநரை மீட்டு பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இது தொடர்பாக, பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் கொடுத்த புகார் மீது W-36 புழல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையில், இன்று (31.10.2026) அதிகாலை சுமார் 05.30 மணியளவில் மேற்படி ஆட்டோ ஓட்டுநர் மருத்துவமனையிலிருந்து காணாமல் போனதாக தெரியவந்ததின்பேரில், கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் மேற்பார்வையில், புழல் சரக உதவி ஆணையாளர் தலைமையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு, ஆட்டோ ஓட்டுநரை தீவிரமாக தேடி வருகின்றனர்

தலைக்கவசம் அணிவோம் – உயிரைக் காப்போம்
Wear a helmet. Save a life.

RS Polyclinic

OUR ESTEEMED DOCTORS

Dr M. Rajkumar
MBBS MS DNB MCH (vascular)
Sr Vascular Surgeon
☎ **98410 25996**

Dr K. Namitha Bhuvaneswari
MS (Opthal) DO MBA
Sr Eye Surgeon
☎ **9444 288784**

Dr Sathish Rajkumar
MBBS MS FMAS
Laparoscopic & Laser Surgeon
☎ **9445 401793**

Dr Shanthi R
MBBS MS MCH (vascular)
Sr Vascular Surgeon
☎ **9884 650945**

Dr Salins R
MBBS MD
General Physician
☎ **87780 87742**

Dr Praveena E
MBBS MS (ENT)
Sr ENT Surgeon
☎ **9944 100443**

EXPERT DOCTORS | COMPASSIONATE CARE | ADVANCED TREATMENT | YOUR HEALTH OUR PRIORITY

Caring for you... Every day, Every way.

போலீஸ் செய்தி

திருமங்கலம் பகுதியில் இருவரை கொலை முயற்சி செய்த வழக்கில்



5 குற்றவாளிகளுக்கு தலா 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனை மற்றும் தலா ரூ.10,000/- அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு.

சென்னை, அண்ணாநகர் மேற்கு, எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் வசித்து வரும் பெரியசாமி, வ/25/2010 என்பவர் அவரது நண்பர் பாண்டியராஜன் என்பவருடன் கடந்த 10.10.2010 அன்று இரவு, திருமங்கலம், 13வது மெயின் ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த சாமுவேல், சீதாராமன், முரளி, செல்வம் (எ) செல்வகுமார், தயா (எ) தயாநிதி, சுரேஷ் ஆகிய 6 நபர்களும் சேர்ந்து, முன்விரோதம் காரணமாக, வீண் தகராறு செய்து, கட்டை, கத்தி மற்றும் இரும்பு ராடால் தாக்கி, கொலை முயற்சியில் ஈடுபட்டு, தப்பிச் சென்றதாகவும், இரத்த காயமடைந்த பெரியசாமி மற்றும் பாண்டியராஜன் ஆகிய இருவரும் KMC அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, பெரியசாமி என்பவர் கொடுத்த புகாரின்பேரில், V-5

திருமங்கலம் காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, பழைய திருமங்கலம் பகுதியை சேர்ந்த எதிரிகள் 1.சாமுவேல், வ/25, 2.சீதாராமன், வ/27, 3.முரளி, வ/26, 4.செல்வம் (எ) செல்வகுமார், வ/22, 5.தயா (எ) தயாநிதி, வ/25, 6.சுரேஷ்,வ/24 ஆகிய 6 நபர்களை கடந்த 2010ம் ஆண்டு கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

V-5 திருமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் இவ்வழக்கு முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை, உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள 4வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், எதிரி செல்வம் (எ) செல்வகுமார் என்பவர் கடந்த 14.05.2024 அன்று இறந்துவிட்ட நிலையில், நீதிமன்ற விசாரணை முடிவடைந்து, நேற்று (29.10.2026) இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் 1.சாமுவேல், 2.சீதாராமன், 3.முரளி, 4.தயா (எ) தயாநிதி, 5.சுரேஷ் ஆகிய 5 நபர்கள் மீதும் குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டு, மேற்படி 5 குற்றவாளிகளுக்கும் தலா 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.10,000/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் ஒரு வருடம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார்.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற

நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி சாட்சிகளை ஆஜர்படுத்தி, தொடர்ச்சியான நடவடிக்கைகளினால் நீதிமன்றத்தில் குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த V-5 திருமங்கலம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் பாராட்டினர்.

போலீஸ் செய்தி

முதல் திருமணத்தை மறைத்து புளியந்தோப்பு பகுதியில் வேறொரு பெண்ணை திருமணம் செய்து சில மாதங்களில் 2வது மனைவியை பிரிந்து சென்று தலைமறைவானவர் கைது



சென்னை, புளியந்தோப்பு பகுதியில் வசித்து வரும் ஹசீனா பானு, பெ/வ.33 என்பவருக்கும், அமீர் ஹம்சா அலி என்பவருக்கும் டிசம்பர்-2018ம் ஆண்டு புளியந்தோப்பு பகுதியில் திருமணம் நடந்து இருவரும் வாழ்ந்து வந்ததாகவும், திருமணத்தின்போது ஹசீனா பானு ரூ.5 இலட்சம் பணத்தை கணவருக்கு கொடுத்ததாகவும், திருமணமான சில மாதங்களில் (2019ம் ஆண்டு) ஹசீனா கர்ப்பினியாக இருந்தபோது, அமீர் ஹம்சா அலியின் நடவடிக்கைகள் சரியியில்லாதபோது, அவருக்கு ஏற்கனவே திருமணமானது தெரியவந்து, இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அமீர் ஹம்சா அலி மனைவி ஹசீனா பானுவை தாக்கி கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், பின்னர் குழந்தை பிறந்தும் அமீர் ஹம்சா அலி திரும்ப

வராததால், தன்னை ஏமாற்றி திருமணம் செய்து, பணத்தை அபகரித்து தலைமறைவான அமீர் ஹம்சா அலி மீது நடவடிக்கை எடுக்கும்படி ஹசீனா பானு என்பவர் 2021ம் ஆண்டு W-16 புளியந்தோப்பு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் (AWPS) புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

W-16 புளியந்தோப்பு அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி வழக்கில் சுமார் 6 வருடங்கள் தலைமறைவாக இருந்த எதிரி அமீர் ஹம்சா அலி, வ/40, பட்கல், உத்தரகன்னடா, கர்நாடகா மாநிலம் என்பவரை நேற்று (27.10.2026) கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி அமீர் ஹம்சா அலி விசாரணைக்குப் பின்னர் நேற்று (27.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

போலீஸ் செய்தி

வேறு இடத்தில் அடகு வைத்துள்ள தங்க நகைகளை மீட்டு தருமாறு திருவொற்றியூர் பகுதியில் உள்ள தனியார் பைனான்ஸ் நிறுவனத்தை அணுகி ரூ.44.6 இலட்சம் பண மோசடி செய்த வழக்கில் பைனான்ஸ் நிறுவன கிளை மேலாளர் மற்றும் பெண் கைது



சென்னை, திருவொற்றியூர் பகுதியில் உள்ள தனியார் பைனான்ஸ் மற்றும் தங்க நகை அடகு நிறுவனத்தில் பகுதி மேலாளராக பணிபுரிந்து

வரும் அரவிந்த், என்பவர் H-8 திருவொற்றியூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரில், கடந்த 01.07.2026 அன்று அப்பொழுது தங்களது திருவொற்றியூர் கிளை பைனான்ஸ் நிறுவனத்தில் கிளை மேலாளராக இருந்த பிரவீன்குமாரிடம். காயத்ரி என்பவர் அணுகி, காயத்ரி என்பவர் குரோம்பேட்டை பகுதியிலுள்ள ஒரு தனியார் பைனான்ஸ் நிறுவனத்தில் தனது 411 கிராம் தங்க நகைகளை அடகு வைத்துள்ளதாகவும், மேற்படி தங்க நகைகளை மீட்டு உங்களது பைனான்ஸ் நிறுவனத்தில் அடகு வைத்துக்கொள்ளுமாறும் கூறி தங்க நகைகளை அடகு வைத்து ரசீதை காண்பித்ததாகவும், கிளை மேலாளர் பிரவீன்குமார் மேற்படி அடகு ரசீது மற்றும் அப்பெண்ணின் ஆதார் உள்ளிட்ட ஆவணங்களை சரிபார்த்து, பைனான்ஸ் நிறுவனத்தில் உத்தரவு பெற்று ரூ..44.67 இலட்சம் பணத்தை காயத்ரி கூறிய ஒரு தனியார் வங்கி கணக்கிற்கு அனுப்பியதாகவும், அதன் பின்னர் காயத்ரி மேற்படி தங்க நகைகளை கொண்டு வராமல் தலைமறைவானதாகவும், இதற்கு உடந்தையாக தங்களது தனியார் கிளை மேலாளர் பிரவீன்குமார் செயல்பட்டுள்ளதாகவும், இருவர் மீதும் நடவடிக்கை எடுத்து, தங்களது தனியார் பைனான்ஸ் நிறுவனத்தின் பணத்தை மீட்டு தரும்படியும் குறிப்பிட்டிருந்தார்.

H-8 திருவொற்றியூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில் புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது போல மேற்படி திருவொற்றியூர் தனியார் பைனான்ஸ் நிறுவன கிளை

மேலாளர் பிரவீன்குமார் மற்றும் காயத்ரி கூட்டு சேர்ந்து தனியார் பைனான்ஸ் நிறுவனத்தின் பணத்தை காயத்ரியின் தனியார் வங்கிக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் அப்பணத்தை ராதாகிருஷ்ணன் என்பவரது வங்கி கணக்கிற்கு மாற்றி பணத்தை அபகரித்துள்ளதும் தெரியவந்தது.

அதன்பேரில், மேற்படி புகார் மீது H-8 திருவொற்றியூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் வழக்குப் பதிவு செய்தி முன்னாள் திருவொற்றியூர் கிளை மேலாளர் பிரவீன்குமார், 25, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் மோசடி பெண்மணி காயத்ரி, பெ/வ.24, மணலி, புது நகர், சென்னை ஆகிய இருவரை நேற்று (27.10.2026) கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி காயத்ரி மீது ஏற்கனவே H-5 புது வண்ணாரப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் ஒரு மோசடி வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று (27.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய தலைமறைவு எதிரி ராதாகிருஷ்ணன் என்பவரை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்

சீட் பெல்ட் அணிவது உங்கள் உயிரைக் காக்கும்

Buckle up on every trip.

போலீஸ் செய்தி

மயிலாப்பூர் பகுதியில் வீண் தகராறு செய்து மூவரை தாக்கிய சகோதரர்கள் இருவர் கைது




சென்னை, மயிலாப்பூர் பகுதியில் 42 வயது பெண் தனது பெற்றோருடன் வசித்து வருவதாகவும், இவர் கடந்த 27.09.2026 அன்று இரவு தனது வீட்டின் அருகில் நின்று கொண்டிருந்தபோது வீட்டின் அருகே வசிக்கும் சக்திதாசன் என்பவர் மதுபோதையில் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து அப்பெண்ணை இடிப்பது போல் வந்ததாகவும், பயந்துபோன அப்பெண் ''ஏன் இவ்வாறு வேகமாக வருகிறாய், அருகில் குழந்தைகள் இருக்கிறது'' என கூறி சத்தம் போடவே, சக்திதாசன் அவரது அண்ணன் கோகுல்ராஜ் மற்றும் உறவினர்களை அழைத்து வந்து அப்பெண்ணை தகாத வார்த்தைகள் பேசி தகராறு செய்து கையால் தாக்கி தடுக்க வந்த அப்பெண்ணின் தந்தை மற்றும் தாயாரையும் அவர்கள் தாக்கிவிட்டு தப்பிச்சென்றதாகவும், தாக்குதலில் காயமடைந்த அப்பெண் மற்றும் அவரது தாயார் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து E-1 மயிலாப்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (BNS) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை

தடுப்புச்சட்டம் (TNPHW) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

E-1 மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் சக்திதாசன், வ/41, சண்முகம் தெரு, மயிலாப்பூர் மற்றும் அவரது அண்ணன் கோகுல்ராஜ், வ/42 ஆகிய இருவரை நேற்று (27.10.2026) கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பிறகு நேற்று (27.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டு தலைமறைவாக உள்ள மற்ற எதிரிகளை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

போலீஸ் செய்தி

சென்னை பெருநகர காவல், சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையில், சாலிகிராமம் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் சைபர் குற்றங்கள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ், இ.கா.ப., அவர்களின் உத்தரவுப்படி, கூடுதல் காவல் ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு அவர்களின் அறிவுரையின்பேரில், சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.K.உஷாராணி தலைமையில் இன்று (31.10.2026) காலை, சென்னை, சாலிகிராமம், அருணாச்சலம்

ரோடு சாலிகிராமம், Horizone Residence அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் குடியிருப்பாளர்களிடம் சைபர் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் இன்ஸ்டாகிராம், முகநூல், X-(twitter) தளம், Snapchat, மற்றும் வாட்சப் உள்ளிட்ட சமூக வலைதளங்களை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்தும், டிஜிட்டல் கைது, (Digital Arrest), ஆன்லைன் முதலீட்டு மோசடி (Online Investment scam), ஆன்லைன் வர்த்தக மோசடி (Online Trading scam) இணையவழி பின்தொடர்தல் (Cyber Stalking), இணையவழி ஏமாற்றுதல் (Phishing), இணையவழி துன்புறுத்தல் (Cyber bullying) குறித்தும், கடன் செயலி மோசடி, பரிசு மோசடி, (Gift Scam) கூரியர் மோசடி, (Courier Scam), திருமண இணைய மோசடி (Matrinomial Scam), பாஸ் பெயரில் நடைபெறும் பண மோசடி (Boss Scam) உள்ளிட்ட பல்வேறு சைபர் குற்றங்கள் மற்றும் இதர இணையவழி மோசடிகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் பாஸ்வேர்டு, OTP, CVV எண், வங்கிக் கணக்கு எண், தனிப்பட்ட தகவல்கள், புகைப்படங்கள், வீடியோக்கள், வீடு மற்றும் பிற முக்கிய விவரங்களை தேவையில்லாமல் சமூக வலைதளங்களிலோ, இணையத்திலோ யாருடனும் பகிராமல் பாதுகாப்புடன் கையாள்வது குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், ஏதேனும் சைபர் துன்புறுத்தல், மிரட்டல் அல்லது இணையவழி மோசடியை எதிர்கொண்டால், சைபர்

குற்ற உதவி எண் 1930-ஐ தொடர்புகொள்வது மற்றும் www.cybercrime.gov.in என்ற National Cyber Crime Reporting Portal மூலம் புகார் அளிப்பது குறித்து விளக்கப்பட்டு, சைபர் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநோகிக்கப்பட்டு, நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் குடியிருப்பு நல சங்க நிர்வாகிகள் மற்றும் குடியிருப்பில் வசித்து வரும் முதியவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர்.

போலீஸ் செய்தி

மாதவரம் பகுதியில் இருவேறு திருட்டு வழக்குகளில் இருசக்கர வாகனம், செல்போன் மற்றும் பணத்தை திருடிச்சென்ற நபர் கைது

இருசக்கர வாகனம் மீட்பு



சென்னை, மாதவரம், பஜார் தெருவில் வசித்து வரும் சபாபதி, வ/51, த/ பெ.முருகேசன் என்பவர் கடந்த 25.10.2026 அன்று வீட்டின் அருகே அவரது DIO இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு மறுநாள் (26.10.2026) காலை வந்து பார்த்த போது, அவரது இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றது தெரியவந்ததாகவும், திருட்டில் ஈடுபட்ட நபரை கண்டுபிடித்து தனது இருசக்கர வாகனத்தை மீட்டு தரும்படி சபாபதி என்பவரும், இதே போல சென்னை, மாதவரம், திரு.வி.க நகர், 2வது தெருவில் வசித்து வரும்

தனியார் நிறுவன டெலிவரி ஊழியர் மணிவண்ணன், வ/36, த/பெ.கிருஷ்ணன் என்பவர் கடந்த 25.10.2026 அன்று வீட்டில் தூங்கி விட்டு அதிகாலை எழுந்து பார்த்த போது, வீட்டில் இருந்த 3 செல்போன்கள் மற்றும் பணம் ரூ.8,000/- ஐ யாரோ திருடிச்சென்றது தெரியவந்ததாகவும், செல்போன் மற்றும் பணத்தை திருடிய நபர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மேற்படி மணிவண்ணன் ஆகிய இருவர் M-1 மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகார் மீது 2 வழக்குகள் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

M-1 மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடங்களில் தீவிர விசாரணை செய்து, மேற்படி 2 திருட்டு வழக்குகளிலும் தொடர்புடைய எதிரி வசந்தகுமார் (எ) கருப்பு (எ) வசந்த், வ/29, தண்டையார்பேட்டை, சென்னை என்பவரை நேற்று (31.10.2026) கைது செய்தனர். மேலும் விசாரணையில் எதிரி வசந்தகுமார், புகார்தாரர் மணிவண்ணன் வீட்டில் திருடிய 3 செல்போன்களை விற்றும், திருடிய பணத்தை செலவு செய்ததும் தெரியவந்தது. அவரிடமிருந்து புகார்தாரர் சபாபதியின் இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரி வசந்தகுமார் (எ) கருப்பு (எ) வசந்த் மீது 4 குற்ற வழக்குகள் , உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி வசந்தகுமார் (எ) கருப்பு (எ) வசந்த் விசாரணைக்கு பின்னர் நேற்று (31.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற

உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

போலீஸ் செய்தி

மாதவரம் பகுதியில் தூய்மை பணியாளரிடம் வீண் தகராறு செய்து தாக்கிய நபர்கைது

சென்னை, எண்ணூர், கார்கில் நகர், ஹவுசிங் போர்டில் வசித்து வரும் சாந்தி, வ/50, க/பெ.கிருஷ்ணன் என்பவர் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியளாராக வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 29.10.2026 அன்று மாதவரம், பொன்னியம்மன் மேடு, 80 அடி ரோடு குமரன் நகர் பேருந்து நிலையம் அருகே தூய்மை பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது, அங்கு சாப்பிட்டு கொண்டிருந்த நபர் ஒருவர் அவதூறாக பேசி தூசி பரப்பதாக கூறி மேற்படி பெண் சாந்தியிடம் வீண் தகராறு செய்து கையால் தாக்கி கீழே தள்ளி விட்டு கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச்சென்றார். தாக்குதலில் காயமடைந்த சாந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று, தன்னை தாக்கிய நபர் மீது நடவடிக்கை எடுக்கும்படி M-1 மாதவரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (BNS Act) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் (TNPHW Act) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

M-1 மாதவரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட

எதிரி செல்வம், வ/61, மதுரை சாமி மடம் தெரு, செம்பியம் சென்னை நேற்று (31.10.2026) கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி செல்வம் விசாரணைக்குப் பின்னர் நேற்று (31.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

போலீஸ் செய்தி

பேசின் பாலம் பகுதியில் வீண்தகராறு செய்து இருவரை தாக்கிய நபர் கைது

சென்னை, புளியந்தோப்பு, K.P.பார்க், பகுதியில் வசித்து வரும் தினேஷ், வ/31, தபெ.ஆனந்த் என்பவர் லோடுமேன் வேலை செய்து வருவதாகவும், தினேஷ் கடந்த 30.10.2026 அன்று வேலை முடித்து நள்ளிரவு அவரது நண்பர் ஜனார்த்தனன் என்பவருடன் சேர்ந்து மோதிலால் நேரு தெரு, ரேஷன் கடை அருகே நடந்து சென்ற போது, அங்கிருந்த நபர் ஒருவர் மேற்படி தினேஷ் மற்றும் அவரது நண்பர் ஜனார்த்தனிடம் இந்த நேரத்தில் உங்களுக்கு என்னடா இங்கு வேலை என்று கேட்டு வீண் தகராறு செய்து கட்டை மற்றும் செங்கல்லால் தாக்கிவிட்டு கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச்சென்றார்.

காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். பின்னர் தினேஷ் இது குறித்து கொடுத்த புகாரின் பேரில் P-4 பேசின்பாலம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

P-4 பேசின் பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி ஹரிஹரன், வ/19, எண்.10/12, குருசாமி நகர் மெயின் தெரு, புளியந்தோப்பு, சென்னை என்பவரை நேற்று (31.10.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச்செயலுக்கு பயன்படுத்திய கட்டை பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி ஹரிஹரன் விசாரணைக்குப் பின்னர் நேற்று (31.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

போலீஸ் செய்தி

மாதவரம் பகுதியில் தனியார் பேருந்து கிளீனரின் செல்போனை பறித்துச் சென்ற வழக்கில் ஒருவர் கைது



திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த சிவபாலாஜி என்பவர் தனியார் பேருந்து கிளீனராக வேலை செய்து வருவதாகவும், இவர் மேற்படி தனியார் பேருந்தின் ஓட்டுநர் சிவபிரசாத் என்பவருடன் 28.10.2026 அன்று இரவு சென்னை, மாதவரம் பகுதிக்கு வந்து, மாதவரம் ரவுண்டனா மேம்பாலம் அருகில் பேருந்தை நிறுத்திவிட்டு, பேருந்தில் அமர்ந்து செல்போனை பார்த்துக் கொண்டிருந்ததாகவும், அப்பொழுது அவ்வழியே வந்த 2 நபர்கள் சிவபாலாஜி கையில் வைத்திருந்த

செல்போனை பறித்துக் கொண்டு ஓடவே, சிவபாலாஜி மற்றும் ஓட்டுநர் சிவபிரசாத் துரத்திச் சென்று ஒருவரை பிடிக்க, செல்போனுடன் மற்றொருவர் தப்பியோடி விட்டதாகவும், பிடிபட்ட நபரை M-1 மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் ஒப்படைத்து, அவரை விசாரணை செய்து, தப்பிச்சென்ற அவரது நண்பரை பிடித்து தனது செல்போனை மீட்டு தரும்படியும், சிவபாலாஜி என்பவர் கொடுத்த புகாரின் பேரில், வழக்குப் பதிவுசெய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

M-1 மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்து, மேற்படி செல்போன் பறிப்பில் ஈடுபட்டு பிடிபட்ட எதிரி ஆனந்த செல்வன், வ/29, அசிஸ் நகர், மாதவரம், சென்னை என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி ஆனந்த செல்வன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், புகார்தாரரின் செல்போனுடன் தப்பிச் சென்ற எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

மது அருந்தி வாகனம் ஓட்டாதீர்கள்

Never drink and drive.

தமிழ் மக்கள் குரல் | போலீஸ் டைரி

வேகம் விவேகம் அல்ல – வேகத்தைக் குறையுங்கள்

Speed thrills but kills.

தமிழ் மக்கள் குரல் | போலீஸ் டைரி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்

MM கிளினிக்

அரசு மூத்த மருத்துவ அதிகாரி

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் 60 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் - பெண்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படும்

சிகிச்சை மற்றும் சேவைகள்

- பொது மருத்துவம்
- நீரிழிவு நோய் மற்றும் இரத்த அழுத்த நோய்க்கு சிகிச்சை அளித்தல்
- காயம் பராமரிப்பு சிகிச்சை - நீண்ட நாள் குணமடையாத காயங்களை குணப்படுத்துதல்
- தொலைபேசி மூலம் ஆலோசனை வழங்குதல்
- வீட்டிற்கு சென்று சிகிச்சை அளித்தல்

இதர அம்சங்கள் - இதர சேவைகள்

- சான்றிதழ்களுக்கு சான்றளித்தல்
- மருத்துவ சான்றிதழ் அளித்தல்
- உடற்தகுதிச் சான்றிதழ் அளித்தல்

Jai Balaji Medical - 10% OFF

- அனைத்து விதமான மருந்துகள் - இலவச டோர் டெலிவரி
- வடபழனி, கோடம்பாக்கம் & அசோக் நகர் ஆகிய பகுதிகளில் டெலிவரி வசதி உள்ளது.
- ஆர்டர்கள் (அ) கால் மூலம் மேலாளரிடம் ஆர்டர் செய்யலாம்.

8668018731

அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

Engineering Projects Pvt Ltd

Build Your Future With Us

25+	450+	500+	20+
Locations	Employees	Projects	Years of Excellence

- Project Management
- Commercial Construction
- Structural Design
- PEB and HVAC Works
- Residential Construction
- Industrial & Factory Construction
- Architectural Design

In 2013 Oasis Grace extended its operations to India with a goal of bringing international construction practices to India.

RTN.DR.R.SATHYANARAYANAN, Director - Business Development

+91 9360136897 / +91 8148231942

No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015

www.oasisgrace.in | business@jmrgroup.org

Tamil Makkal Kural Police Diary

EDITOR AND PUBLISHER

Rtn Dr R Sathyanarayanan

24/4, Puliyur Main Road, Trustpuram, Kodambakkam, Chennai - 600024

Mobile: 8148231942 / 9710280469